செ.வெ.எண்.30 நாள்: 16.06.2020

# தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்து வர ரூ.1,900 கோடி மதிப்பில் கோல்செட்டி அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---

தூத்துக்குடி மாவட்டம் புதிதாக அமைக்கப்படும் உடன்குடி அனல் மின் நிலையத்திற்கு நிலக்கரி எடுத்து வர ரூ.1,900 கோடி மதிப்பில் கோல்செட்டி அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.06.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பணியாளர்கள் அனைவரும் முககவசங்கள் அணிந்து, சமூக இடைவெளியை பின்பற்றி பணியாற்றுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும் என தெரிவித்தார்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கோல்செட்டி மூலம் நிலக்கரிகளை சுமார் 8 கி.மீ. கடலுக்குள் எடுத்து செல்வதற்கு ஏதுவாக நடைபெற்று கொண்டிருக்கும் பாலம் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு, இந்த பணிகளின் விவரங்களை கேட்டறிந்தார். IPD சிமிண்டேசன் இந்தியா லிமிட் மூலம் தற்போது 30 சதவிதம் பணிகள் முடிவு பெற்றதாகவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. இந்த பணிகளுக்கு தேவையான உதவிகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.பிரித்திவிராஜ், இ.ஆ.ப., திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.தனப்பரியா, தமிழ்நாடு மின்சார பகிர்மான கழகத்தின் உடன்குடி திட்ட முதன்மை பொறியாளர் திரு.நவசக்தி, கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.பாண்டியராஜன், திரு.ஜெயக்குமார், செயற்பொறியாளர்கள் திரு.கணபதி, திரு.நாராயணன், திரு.இசக்கி, திரு.இளங்கோவன், IPD சிமிண்டேசன் இந்தியா லிமிட் திட்ட மேலாளர் திரு.தியோடர்பால், கட்டுமான பிரிவு மேலாளர் திரு.சஞ்சய்மித்ரா, நிர்வாக மேலாளர் திரு.சுப்பிரமணியன், நிர்வாக அலுவலர் திரு.சகாயம் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.